அறிவிப்பார்களா? அப்படிக் கொள்முதல் செய்வதற்கு அதிகமான நிதியைச் செலவு செய்வதைக் காட்டிலும், எக்கருக்கு இவ்வளவு நெல் கொடுக்கவேண்டும் என்று லெவி முறையை வகுத்து, கொள்முதலுக்காக நியமித்திருக்கிற இவ்வளவு சிப்பந்திகளை வைத்துக் கொள்ளாமல், அவர்களையெல்லாம் அவர்களுக்குண்டான வேலைகளுக்கு அனுப்பி, லெவி முறையில் நெல்லை வசூலிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: லெவி பற்றிப் பரிசீலிக்கப் படும்.

* 418 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of lorries seized by Procurement officials from 1st June 1966 to 31st March 1967 for unlawful transportation of paddy, rice and ragi in Tindivanam taluk; and

(b) the number of cases filed against the lorry owners and the owners of the food-grains and the number of cases among them, that went against the Government?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) திண்டிவனம் தாலுக்காவில் எந்த லாரியும் குறிப்பிடப்பட்ட நாட்களில் பிடிக்கப் படவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

* 419 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that one big foodgrains racket has been unearthed in Madras City by the Vigilance Cell, C.I.D., Madras State;

(b) if so, the details thereof; and

(c) the extent of public loss thereby?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் மிகுதியான அளவில் உணவு தானியங்களை வாங்குவதற்கான போலிக்கார்டுகளும் (bogus bulk consumer cards) உணவுப் பங்கீட்டுக் குடும்பக் கார்டுகளும் (Retail cards) வழங்கப்பட்டுவரும் மோசடி 23—8—1966 அன்று அம்பலமாகியது. அன்று செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கத்தின் பட்டியல் பிரிவைச் சேர்ந்த (Bills Section) எழுத்தர்கள் சிலருடைய பெயர்களில் போலி அனுமதிச் சீட்டுகள் இருப்பதாகக் கண்டு பிடித்தனர். பங்கீட்டு அலுவலகக் கண்காணிப்பாளர் ஒருவரது கையொப்பமும், உணவுப் பங்கீட்டுத் துறைத் துணை ஆணையர் (பங்கீடு) கையொப்பமும் அந்த அனுமதிச் சீட்டுகளில் மோசடியாகப் போடப்பட்டிருந்தன. மயிலாப்பூர் போலீஸ் நிலையம் இது குறித்து புலனாய்வு செய்து வருகிறது.

1967 நவம்பர் 24]

(உ) அரசுக்கு வருவாய் இழப்பு ஏதுவும் ஏற்படவில்லை. ஆனால் மாநகரில் பங்கீட்டுப் பண்டங்கள் மக்களுக்கு வழங்கப்படுவது அதனால் பாதிக்கப்பட்டது. உணவுப் பங்கீட்டுத் துறை மக்களுக்கு நியாயமான அளவுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய உணவுப் பண்ட இருப்புக்கள் சமூக எதிரிகளின் கைகளில் சிக்கின.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, இந்தத் தவறு நடந்து, தவறு செய்தவர் ஒருவர் இருக்கிறாரே அவரோடு பணி செய்கிற ஒருவர், தனக்குச் சரியாகப் பங்கு தரவில்லை என்ற காரணத்தை வைத்து, அவர் மேல் இருக்கிற கோபத்தினால், அவர் கொடுத்த தகவலை வைத்து, இந்த விஜிலென்ஸ் செல் கண்டு பிடித்தது. இதுபோலச் சென்னையில் பல இடங்களில் நடக்கின்றன. இந்தமாதிரித் தவறு நடப்பதை ஆராயவும், அதே போல குடும்பக் கார்டுகளில் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அதைவிட அதிகமான நபர்களைக் குறித்து வைத்திருக்கிறார்கள்—நமது முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள், அவர் வீட்டுக் கார்டிலே இரண்டு பேர்களுடைய பெயர்கள் அதிகமாக இருப்பதாக—இந்த மாதிரித் தவறுகள் இருந்தால் அவைகளைச் சரி செய்யவும், இதற்காக ஒரு குழு போட்டு, உண்மையில் இத்தனை பேர்கள் தான் வாங்கிச் சாப்பிட வேண்டும் என்று முடிவாக ஒரு கணக்கை இந்த அரசு தயாரிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பங்கு கொடுக்காத காரணத்தினால்தான் குற்றவாளிகள் காட்டிக் கொடுக்கப் பட்டார்கள் என்ற செய்தி கனம் அங்கத்தினருக்குத் தெரிந்திருப்பது பற்றி மகிழ்ச்சி. அந்தச் செய்தி அவருக்கு எப்படிக் கிடைத்தது என்று தெரிவிப்பாரானால், உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அது உதவியாக இருக்கும். இந்தச் செய்தி கிடைத்து 8 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றித் தொடர்ந்து ஆராயப்பட்டு வருகிறது. மற்ற இடங்களிலும் இந்த மாதிரியான தவறுகளைத் தடுக்கவும் கூடுதலாக எண்ணிக்கை சேர்ந்திருப்பதைப் பொறுத்த வரையில் அவைகளைச் சரிசெய்து திருத்தி அமைக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். கனம் முதல் அமைச்சர் அவர்கள் வீட்டிலே பணியாற்றியவர்கள் இரண்டு பேர்களை அதிகமாகக் கொடுத்த போதும், முதலமைச்சர் அவர்கள் அதிகப்படியான நபர்களுக்கு அரிசி வேண்டாம் என்று சொன்னதிலே ஒரு பாகத்தை மட்டும் சொல்லி, ஒரு பாகத்தை மறைத்து, அவர் மீது குற்றம் சுமத்தும் வகையில் கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு வருந்துகிறேன்.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, எனக்கும் முதலமைச்சருக்கும் ஆகாதபடி, விரோதம் ஆகும் அளவுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவது தவறு என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த எண்ணம் என்றைக்கும் கிடையாது. அன்பு என்றைக்கும் தொடர்ந்து இருக்கும்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, குடும்பக் கார்டுத் திட்டம் கொண்டு வந்த நேரத்தில் கணக்கு எடுக்கும் காரியம் செய்தது முன்பு இருந்த அரசு ஆகும். அதைத் திருத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்போது இருக்கிற நம் சர்க்கார் அதிகாரிகள் வெளியூரிலிருந்து யாராவது சென்னைக்குக் குடிவந்து விட்டால் சென்னையில் இருக்கிற ஒரு எம்.எல்.ஏ. அல்லது கவுன் ஸிலர் ஒருவரிடமிருந்து சிபாரிசு கடிதம் வேண்டுமென்று கேட்கி ரூர்கள். அதற்குப் பதில், வெளியூர்களிலிருந்து வரும்போது அந்த ஊர் கிராம முன்சீப்பிடமிருந்து கையெழுத்து வாங்கி வர வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சென்ற அரசு இருந்த நேரத்தில்தான் இந்தத் தவறே ஏற்பட்டது. அதைத் திருத்தி அமைக்கும் முறையிலே, கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனையை மேற்கொள்ளலாம்.

திரு. எம். எஸ். மணி: சார், இந்த மோசடி நடந்த செங்கற்பட்டு சொஸைட்டிக்கு தலைவர் யார்? அந்தந்தத் தலைவர் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டதா? அந்த சொஸைட்டி ரத்து செயய்ப் பட்டதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த சொஸைட்டியின் தலைவர் திரு. வி. கே. ராமசுவாமி முதலியார். அந்த சொஸைட்டி தாற்காலிகமாகத் தடை செய்யப்பட்டது—சஸ்பெண்டு செய்யப் பட்டது. பிறகு அந்தத் தடையை நீக்கி விட்டார்கள்.

திரு. கே. விநயகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலின் விளைவாக இன்னொரு உப-கேள்வி கேட்க விரும்பு கிறேன். சொஸைட்டியின் தலைவர் திரு. வி. கே. ராமசுவாமி முதலியாருக்கும் இந்த மோசடிக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது போல இருக்கிறது அமைச்சர் அவர்களுடைய பதில். இந்த மோசடிக்கும் அவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் உறுப்பினருடைய கேள்வியில்தான் அவருக்கும் அதற்கும் சம்பந்தம் இருப்பதாக தொனிக்கிறதே தவிர, அவருக்கும் அதற்கும் சம்பந்தம் இருக் கிறது என்று நான் சொல்லவேயில்லை.

* 420 Q.—THIRU S. RAMACHANDRAN : THIRU A. M. RAJA : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the smuggling of foodgrains through the sea surrounding Kanyakumari district; and

(*b*) if so, the steps taken by Government to prevent the same?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) கேரள மாநிலத்திற்கு அரபிக்கடல் வழியாக உணவு தானியங்களைக் கடத்தக்கூடும் என் பதை அரசு அறிந்துள்ளது.